தாராபுரத்தின் தன்மானம் காக்க – 'ரீல்ஸ்' முதல்வரின் ஆணவத்துக்குப் பதிலடி தர

அக்.6 - அன்று கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்வீர்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, அக். 4 -

தாராபுரத்தில் நடைபெற்ற ரோடு ஷோ மற்றும் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் "தாராபுரத்தின் தன்மானம் காக்க - 'ரீல்ஸ்' முதல்வரின் ஆணவத்துக்குப் பதிலடி தர கழக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யா அவர்களை வெற்றி பெறச் செய்வீர்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

இடைத்தேர்தல்: வாக்காளர்களின் கண்ணியத்திற்கு முதலமைச்சர் விட்டிருக்கும் சவால்!

மக்களிடம் பெற்ற வாக்குகளை விற்ற ஒரு வேட்பாளர் அதை விலை பேசி வாங்கிய ஒரு கட்சி. இவர்களுக்கா உங்கள் வாக்கு?

பெரும்பான்மையான மக்களின் ஆதரவில்லாத "ரீல்ஸ்" முதலமைச்சரின் ஆணவத்துக்குப் பதிலடி கொடுக்க, தாராபுரத்தின் தன்மானம் காக்க அக்டோபர் 6ஆம் நாள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து சகோதரி வழக்கறிஞர் சுகன்யா அவர்களை வெற்றிபெறச் செய்யுங்கள்!


இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

நிதி மேலாண்மையை தொலைநோக்குப் பார்வையோடு கையாண்டது, திராவிட மாடல் அரசு!

த.வெ.க. அரசின் நிர்வாகக் குறைபாடால் தமிழ்நாட்டில் உற்பத்தி முடங்கியது!

முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!





சென்னை, அக்.4 -

திமுக ஆட்சிக் காலத்தில் நாட்டின் பிற மாநிலங்களை விஞ்சி, இரட்டை இலக்க வளர்ச்சியோடு ஜி.எஸ்.டி வசூலில் சாதனை படைத்த தமிழ்நாட்டின் நிதி நிலைமை, இன்று தொடர்ந்து மூன்று மாதங்களாகக் குறைந்து, 5% வரை சரிவைச் சந்தித்திருப்பது வேதனையளிக்கிறது என முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிற மாநிலங்கள் தொடர் தொழில் வளர்ச்சியைக் காணும் போது, தமிழ்நாட்டில் மட்டும் உற்பத்தி முடங்கி, நுகர்வு சுருங்கி வருவது நிர்வாகக் கோளாறின் வெளிப்படையான அடையாளம்.

தொழில் முதலீடுகளையும் நிதி மேலாண்மையையும் தொலைநோக்குப் பார்வையோடு கையாண்ட திராவிட மாடல் ஆட்சியின் வழி காட்டுதல் இன்றி, பொருளாதாரத்தை முடக்கியுள்ள இந்த சீர்கேட்டிற்கு ஆளும் அரசு என்ன பதில் சொல்லப் போகிறது?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில்

த.வெ.க.வினர் போலி வீடியோ மூலம் அவதூறுப் பிரச்சாரம்!

கழக வழக்கறிஞர்கள் ஆதாரத்துடன் புகார்!



தாராபுரம், அக். 4-

த.வெ.க, வினர் தி.மு.க. கட்சியின் துண்டு அணிந்து கொண்டு வீடு வீடாக பணம் கொடுத்து அதை வீடியோ பதிவு செய்தும் பணத்தை வாங்கிகொண்டு த.வெ.க. விற்கு ஓட்டு போடுவோம் என்று வாக்காளர் உறுதி கூறுவதுபோல் வீடியோ பதிவு செய்து. சமூக வலைதளமான இன்ஸ்டாகிராம், பேஸ்புக், டுவிட்டர், வாட்ஸ் அப், யூடியூப்களில் ரீல்ஸ் வெளியிட்டு த.வெ.க. வினர் அவதூறு பரப்பி வருகின்றனர்.

இது தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் ஆகும். இதன் காரணமாக வீடியோ வெளியிட்ட த.வெ.க.வினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கோரி தி.மு.க. மாநில சட்டத்துறை இணைச் செயலாளரும், தாராபுரம் சட்டமன்ற தொகுதி "வார் ரூம்" பொறுப்பாளருமான எம். அருட்செல்வன் தலைமையிலான வழக்கறிஞர்கள் குழு தாராபுரம் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், வருவாய் கோட்டாட்சியருமன பெலிக்ஸ் ராஜாவிடம் திமுக வழக்கறிஞர்கள் வீடியோ ஆதாரத்துடன் புகார் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர், கோவை, மற்றும் ஈரோடு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் க.செல்வராசு.. ராஜேந்திரபாபு, பொன்ராஜ், பார்த்திபன், பத்மநாபன், அருள்குமார், ராஜா, திருமலை, பத்ரி (எ) பழனிச்சாமி, மகேந்திரன், அன்புசெழியன், வரதராஜ், மருதராஜ், ஆகிய வழக்கறிஞர் குழுவினர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி தொகுதியில்

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சன் டிவி நிதி உதவி!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவில் மகிழ்ச்சி!



தூத்துக்குடி, அக். 4-

நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி தனது ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

எனது தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவில்பட்டி, விளாத்திகுளம் பகுதிகளில் குழந்தைகளிடையே நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்கு முக்கிய காரணங்களாக மிக இளம் வயதில் பெண்களுக்குத் திருமணம் நடைபெறுவது உள்ளிட்ட பல காரணங்களை கண்டறிந்து அவற்றை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சன் டிவி நிறுவனத்தை அணுகினோம்.

அதன் தொடர்ச்சியாக, முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவாக சன் டிவி சார்பில் வழங்கப்படும் சமூக மேம்பாட்டு நிதியிலிருந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கவும், குழந்தைத் திருமணங்களைத் தடுக்கவும், அங்கன்வாடி மையங்கள், பள்ளிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும் ரூ.3.66 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான காசோலையை சன் டிவி சார்பாக திருமிகு. காவேரி கலாநிதி மாறன் அவர்கள்,

தொண்டு அமைப்பிற்கு வழங்கிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். குழந்தைகளின் நலனுக்காக முன்னெடுக்கப்படும் இப்பணிகள் அப்பகுதிகளில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் திருமிகு. செல்வி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே!

இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா முதல்வரே!

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!



நெல்லை, அக்.4 -

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் 100 நாள் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா CMSIR? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பொய்யை மூலதனமாக கொண்டு பிரச்சாரம் செய்தும் பெரும்பான்மை கிடைக்காதால் சோபா நிறையப் பணம் கொடுத்து எதிரணியில் இருந்த கட்சிகளையே விலைக்கு வாங்கிய நீங்கள் தூய சக்தியா CMSIR?

கட்சிகளை வாங்கியும் பெரும்பான்மைக்கு பாதிப்பு வருமோ என்ற அச்சத்தில் பெட்டி பெட்டியாக பணம் கொடுத்து எம்எல்ஏ.க்களை விலைக்கு வாங்கிய நீங்கள் தூய சக்தியா CMSIR?

ரீல்ஸ்களை காட்டி பொய்களை அவிழ்த்து விட்டு இரண்டு தொகுதி இடைத்தேர்தலில் எளிதில் வென்று விடலாம் என்ற உங்களது கனவை சார்பில் திருமிகு. காவேரி கலாநிதி மாறன் அவர்கள்,

தொண்டு அமைப்பிற்கு வழங்கிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். குழந்தைகளின் நலனுக்காக முன்னெடுக்கப்படும் இப்பணிகள் அப்பகுதிகளில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் திருமிகு. செல்வி உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே!

இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா முதல்வரே!

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, அக்.4 -

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் 100 நாள் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா CMSIR? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.

சட்டப்பேரவைத் தேர்தலில் பொய்யை மூலதனமாக கொண்டு பிரச்சாரம் செய்தும் பெரும்பான்மை கிடைக்காதால் சோபா நிறையப் பணம் கொடுத்து எதிரணியில் இருந்த கட்சிகளையே விலைக்கு வாங்கிய நீங்கள் தூய சக்தியா CMSIR?

கட்சிகளை வாங்கியும் பெரும்பான்மைக்கு பாதிப்பு வருமோ என்ற அச்சத்தில் பெட்டி பெட்டியாக பணம் கொடுத்து எம்எல்ஏ.க்களை விலைக்கு வாங்கிய நீங்கள் தூய சக்தியா CMSIR?

ரீல்ஸ்களை காட்டி பொய்களை அவிழ்த்து விட்டு இரண்டு தொகுதி இடைத்தேர்தலில் எளிதில் வென்று விடலாம் என்ற உங்களது கனவை பொய்யாக்கும் விதமாக வேட்பாளர்களை ஊருக்குள் நுழைய விடாமல் மக்கள் விரட்டியடிப்பதை பார்த்து பதறி மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் 100 நாள் வேலைத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் டிபன் பாக்ஸ் நிறைய வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கிறீர்களே இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா CMSIR?

இவ்வாறு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கூறியுள்ளார்.



மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில், குன்னவாக்கம் பகுதியில் மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.சரவணன், பாக முகவர் விஜயகுமார், கிளை செயலாளர் சுதேஷ் ஆகியோர் முன்னிலை யில் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வழக்கறிஞர் திருமதி சுகன்யா அவர்களை ஆதரித்து திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் பொம்மநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட அண்ணா நகர், பொம்மநல்லூர், வெள்ளையகவுண்டன்வலசு, கருப்பாயி வலசு, கவுண்டச்சி வலசு ஆகிய கிராமங்களில் வாக்குகள் சேகரித்தார். உடன் ஒன்றியச் செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார், மங்களம் என். ரவி, மாவட்ட அவைத்தலைவர் மூ.காமாட்சி, துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், மு.பிலால் உசேன், எம். மார்கரெட்மேரி, கு.சத்தியமூர்த்தி, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சுப்புரெத்தினம், மாநகர மேயர் ஜோ.இளமதி, ஒன்றியச் செயலாளர்கள் கே.பி.முருகன், சௌந்திர பாண்டியன், எம்.மணிகண்டன், பி.கனகதுரை, என்.கனிக்குமார், சு.மணி, இரா.இராஜசேகரன், பேரூர் செயலாளர்கள் கே.சின்னத்துரை, ஜெ.ஜோசப் கோவில்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று, சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரையப்பாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும், அ.தி.மு.க. கிளைக் கழக செயலாளருமான பாபு, த.வெ.க. கிளைக் கழக செயலாளர் இதயக்கனி, த.வெ.க. ஒன்றிய மகளிர் அணி செயலாளர் அமிர்தவள்ளி ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், சேலம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் உடன் கலந்து கொண்டனர்.